Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1839) [illegible] ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு புரட்டாதிமீ கஉ வெள்ளிக்கிழமை (28 September. 1962) [இல-உரு]

உலகியல் அலை

# புலிபுலி என்ற புகார் மெய்யானது

## பீலிக்சு கடைசிப் பதவியில் இருந்து பிரிந்துவிட்டார்

### தன் அப்பம் தன்னைச் சுட்டதா?

பீலிக்சு வேலை விடப்போகின்ருர் என்று நாலைந்து கிழமைகளாக நடைபெற்ற கதைக் கொடியேற்றம் கடைசியாக உண்மையாய்விட்டது. உதவி மந்திரிப் பதவிகளையும் துறந்துவிட்ட பீலிக்சு பின் என்ன செய்ய இருக்கின்ருர் என்ற வதந்தி ஆராய்ச்சி இப்பொழுது நிகழ்கின்றது.

பண்டாரநாயக நினைவு தினத்தன்று வெளியான பண்டாரநாயக பதவித் துறவுச் செய்தி பண்டாரநாயக ஆட்சி ஆதிக்கத்தைத் தாக்குமா? அல்லது வெட்ட வெட்ட வேரூன்றிய விதமாக வேறு கோலத்துடன் பீலிக்சு வெளிப்பட்டு நாட்டின் தனிஅதிகாரியாவாரா! பாராளுமன்றத்து நிகழ்ச்சிகளும் புதுமாதிரியாகவேயிருக்கின்றன. உள்ளுராட்சி மந்திரிமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்ந்து விவாதிக்கப்படாதிருப்பதுவும் அந்த மந்திரியார் அயல் நாட்டில் ஓய்வு அனுபவிப்பதுவும் அரசியற்கருமங்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகின்றன.

# சிவஞானபோதம்

——:0:——

[ நவாலியூர் திரு. சோ. நடராசன் B. A. ]

முற்றொடர்—7

முற்றறிவால் உணரப்படும் கடவுளே அந்த முற்றறிவை அருளுவான். அவன் அருளாலேதான் அவனை அறியலாம். ஈசனுக்குக் கோயிலாயமைந்த, குருமூர்த்தியின் உபதேசத்தால் பக்குவப்பட்ட ஆன்மாவிடத்திலேதான் முற்றறிவுமுகிழ்க்கும். இந்த முற்றறிவே பதிஞானம். இதுவே திருவடி ஞானமென்றும், மெய்ஞ்ஞானமென்றும் வழங்கப்படும். இது ஞானக்காட்சி. இக்காட்சியால் காண்பது மெய்ப்பொருள் இம்மெய்யுணர்வு இச்சத்தியதரிசனம், இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காதுறையும் அந்தர்யாமியான கடவுள், ஒளியாய் நின்று காட்ட, பொய்ம்மையின் பொய்மையைக் காண்பதேயாகும்.

காணும் கண்ணுக்குக் காணக் காட்டிக் காணும் உயிர்போலக் காணும் உயிருக்குக் காணக் காட்டிக் காணும் இறைவன்,

அந்தக்காட்சியே மெய்ஞ் ஞானக் காட்சி. இக் காட்சியில் உயிர் காண்பது மெய்ப் பொருளையே. இதுவே ஞான சொரூபம்; இந்த ஞானமே மெய்ஞ் ஞானம், இதுவே மெய்ப் பொருள். இதுவே சிவ ஞானபோதம்.

ஆனல் இவ்வாறு கிடைத்த மெய்ஞ்ஞானக் காட்சி, சிவஞானபோதம் நிலைத்திருக்க வேண்டும். நீண்ட காலம்பொய்ப்பொருளோடு பழகி, அதுவே உண்மையென மயங்கிக் கிடந்த உயிருக்கு, நான் கடவுளின் வேறல்லன், கடவுளின் அமிசமாயுள்ளவன் என்ற புதிய ஞானம் நிலைத்திருக்குமா? வாசனையால் வந்த

தொடர்ச்சி 4ம் பக்கம்

## நாளை தொடங்கும் நவராத்திரி

குவலயத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய மூவகைச் செல்வங்களான மெய் நலம், பொருள், கல்விஅறிவு ஆகியவற்றைத் தந்தருளி நிற்கும் அன்னை பராசக்தியை, முதல் மூன்று நாட்களும், துர்க்கை வடிவிலும், அடுத்த மூன்று நாட்களும் இலக்குமி வடிவிலும் கடைசி மூன்று தினங்களும் சரஸ்வதி உருவிலும் பூசித்து வணங்[illegible] ராத்திரி விழா நாளை [illegible]மாகிறது.

## நற் சிந்தனை

கட்டுப்படாத மனத்தைக் கட்டினல்
எட்டுணையேனும்
இடுக்கண் இல்லையே.

## அம்பிகையின் பாதகமலங்கள்

தாயே! உமது பாததூளி அக்ஞானிகளின் இருளை அகற்றும் சூரியனது உதயமாகவிருக்கிறது பாமரர்க்கு ஞானப் பூங்கோத்தின் மகரந்தப் பெருக்காக இருக்கிறது. தரித்திரருக்குச் சிந்தாமணி போல இருக்கிறது, பிறவிக் கடலில் மூழ்கியவரைக் கரையேற்றும் விஷ்ணுவாகிய வராகத்தின் கோரப் பல்லாக இருக்கிறது.

ஸௌந்தரிய லகரீ-3.
(தமிழாக்கம்) வ. குகசர்மா

## சிவதொண்டன் யாத்திரை வழிபாடு

—0—

சிவதொண்டன் யாத்திரை வழிபாடு வருகிற 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலை 9 மணிக்கு சுன்னுகம் கதிரைமலைச் சிவன் கோவிலில் திருமுறை, நற்சிந்தனை ஓதல் நடைபெறும். இதைத் தொடர்ந்து அபிஷேகம், ஆராதனை, உபந்நியாசம், மகேஸ்வரபூசை ஆகியன இடம்பெறும். மாலை 3-30க்கு காங்கேசன் துறை வீதி வழியாக சிவத்தொண்டன் நிலையத்துக்கு ஊர்வலம் புறப்படும்.

சேறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்றும்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்றும்
நெற்றிமேற்கண்தோன்றும்பெற்றந்தோன்றும்
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்றும்
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிற்களும்பூவணத்தெம்புனிதனர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருணுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

# ஆதி பராசக்தி

——:0:——

உலகில் அனைத்தும் சக்தியினல்தான் இயங்குகின்றன. ஆதி பராசக்தியின் அருள் இல்லையானுல் உலகில் ஓர் அணுவும் அசையாது. "அவளன்றி ஓர் அணுவும் அசையாது" என்று முடிவாகக் கூறிவிடலாம்,

ஆதிபராசக்தி, சக்தி, செல்வம், கல்வி, என்ற முக்கிய மூன்று சக்திகளால் எம்மை ஆட்கொள்ளுகின்ருள். ஒவ்வொரு அமைப்புக்கும் ஒவ்வொரு உருவம் தாங்குதலே அவளது ரூபலாவண்யமாம். நவராத்திரி காலங்களில் முதல் மூன்று நாட்களும் சக்திகளுக்காக துர்க்கை அல்லது மகாகாளி என்னும் உருவத்தைப் பெற்று அருள்சொரிகின்ருர். அடுத்த மூன்று நாட்கள் திருமகளாகிசெல்வ அருள் சுரக்கின்ருர். கடைசி மூன்று நாட்களும் கலைமகளாகி சகல கலைச் செல்வங்களுக்கும் அருள் பாலிக்கின்ருர். பத்தாம் நாள் விஜயதசமி. சக்தியை வழிபட்டு வெற்றி கிட்டும் நாள் இது.

ஸ்ரீ சி. செ. முத்துக்குமாரு
(ஆசிரியர் "இசைக் களஞ்சியம்")

நவராத்திரீ காலத்தை, "கன்னித்திருவிழா" என்று கூறுவாரும் உண்டு. இங்கு பெண்மைக்கு முதலிடம் கொடுத்திருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

இந்தியாவில் நவராத்திரி காலங்களில் அநேகமாக எல்லா இல்லங்களிலும் இஷ்ட தெய்வங்களைக் கொலு இருத்தி ஒன்பது நாளும் சுத்த பக்தியாக பூசைகள் பாராயணங்கள் செய்வார்கள். கலைஞர்கள் தமது கலையை ஆதிபராசக்திக்கு அர்ப்பணம செய்வார்கள். கலை தெய்வீகமானது. அதை முதலில் இறைவிக்குஅர்ப்பணித்தே பின் எந்த விசயத்திற்கும் உபயோகிக்க வேண்டும். சகல கலைகள், செல்வங்கள் சக்திகள் யாவையும் அவளுக்கே அர்ப்பணியுங்கள்.

இறைவிதன் மலரடி
இறைஞ்சி ஏத்துவாம்.

# போற்றுவோமே!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: புன்னுகவராளி :: தாளம்: ஆதி

பல்லவி

போற்றுவோமே பாதம் போற்றுவோமே
பொங்குகலா வல்லிபாதம் போற்றுவோமே.

அநுபல்லவி

வீற்றிருக்கும் வெண்கமல வேத வாணியை
விண்ணவர்கள் தோத்தரிக்கும் வீணு பாணியை
(போற்று)

சரணம்

ஆறுபத்து நான்குகலை அள்ளிப் பருக
ஆன்மசு கம்பொருந்தி அன்பு பெருக
தேறுதல டைந்துதெய்வ சிந்தை யுருக
திரைகடல் போலவரும் ஜென்மம் கருக.
(போற்று)

வடிவுடைய நிறைகுடத்தில் கும்பம் நாட்டி
வாசமலர் கொண்டுவந்து மாலை சூட்டி
[illegible] பொருந்தத் தீட்டி
[illegible]ன் தீபம் காட்டி. (போற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சுபகிருது ஞூ புரட்டாதி மீ
கஉ உ வெள்ளிக்கிழமை


## சுயநலமற்றுத் தொண்டாற்ற முடியாதா?

இந்நாட்டின் அரசியல் நிலைமை யாவருக்கும் இன்னல் விளைவிப்பதாகவே இருக்கின்ற இவ்வேளையில் தமிழ்பேசும் மக்கள் தங்கள் உரிமைகளை எவ்வாறு காப்பாற்றலாம் என்று ஊன்றி யோசிக்க வேண்டிய பொறுப்பு தமிழகத்தொண்டர்களைச் சார்ந்தது. தமிழ் பேசும் இனத்தின் அல்லல்கள் எவை என்பதைப் பற்றி எடுத்து விரித்துரைக்க வேண்டியதில்லை. இனஉரிமை மொழிஉரிமை மதஉரிமை இடஉரிமை என்றின்னோரன்ன பலவேறு உரிமைகள் யாவும் தமிழகத்தாருக்கு மறுக்கப்படுகின்றனவென்ற நிலைமை புலப்படும். ஆகவே ஒரு தனிமனிதன் புறநீங்கலில்லாது தமிழ்பேசும் இனத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் நெருக்கடி உண்டு என்ற உண்மையை உணர்ந்துவிட்டாற் பணிபுரியும் தமிழகத் தொண்டர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்வது சுலபமாகிவிடும். இந்த உரிமை அடிப்படையிலே தமிழ் பேசும் மக்கள் சின்னாபின்னமாகப் பிளவுபட்டுப் பிரிந்து பலங்குன்றி பண்பற்று நிற்க வேண்டியதில்லையே, இன உரிமை வேண்டும் மொழி உரிமை வேண்டும் மத உரிமை வேண்டும் இட உரிமை வேண்டும் என்ற இவ்வளவிலே தமிழகம் ஒன்றுபட வேண்டாமா?

போனது போகட்டும். இவ்வளவில் என்ன நெறியிலே தமிழ்பேசும் மக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும் காப்பாற்றவும் நடந்துகொள்ளுதல் வேண்டும் என்று ஒவ்வொரு தமிழ்பேசும் மகனும் மகளும் உண்மையாக உணர்ந்துவிட்டால் உரிமைகளைப் பெறும் ஆற்றல் தானாகவே தோற்றும்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இப்பொழுதுள்ள நானாவிதமான கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் எல்லாரும் தமிழகத்தின் நலனையே குறித்துப் பணியாற்றுகின்றார்கள், ஆனால் வெவ்வேறு விதமான நடைமுறைக் கொள்கைகளையுடையவர்களாய்ச் செயலாற்றும்பொழுது முரண்பாடுண்டாகின்றது, கருத்து வேற்றுமை தோற்றுகின்றது. உரிமைகளையும் மறந்து பரபரப்பு நிலவுகின்றது. இவற்றின் பயனாகவும் இயக்கம் தளர்வுற்றுப் பலனற்றதாகின்றது. எனவே அடிப்படை நோக்கத்தைத் தொண்டாற்றுகின்றவர்கள் அடிக்கடி நினைத்து எடுத்த கருமத்தை ஏற்ற முறையில் நடத்திப் பயனை எய்த எண்ணுவதே பணியாளர் பண்பாகும். ஆகவே நாம் தமிழகத்து மக்களுக்கும் தலைவர்களுக்கும் கூறக்கூடியதொன்றேயொன்று: உரிமைகளுக்காகவே நாமெல்லோரும் தமிழகத் தொண்டர்கள் என்ற புனைநாமத்துட் புகுந்து பரோபகாரப் பணிப்படையினர் என்று வாய்ப்பறை யறைகின்றோமல்லவா? அந்தக் குறிக்கோளின் உட்கருத்தை ஆராய்ந்து கொள்வோமேயானால் அனைவரும் ஒன்றுபடுவோம்; தனி நினைவு குன்றிவிடும். தமிழகச் சால்பும் ஓங்கும். கட்சியென்றும் கொள்கையென்றும் தலைவன் என்றும் கட்டுப்பட்ட எண்ணத்தைவிட்டு, தமிழ் இனம் என்றும் தமிழ்மொழி என்றும் தமிழ்ச்சால்பு என்றும் தாயகம் என்றும் கட்டுப்படுவோமாக, கடமையாற்றுவோமாக, கடவுள் கருணை பெறுவோமாக.

—0—

## தாயை வணங்குதல் தமிழ் மரபு

நவராத்திரி வருகிறது. இந்த ஒன்பது இராத்திரிகளிலும் அகிலாண்ட மாதாவாகிய சக்திக்கு விசேஷ பூசை நடைபெறும். அதன் நோக்கம், நாமெல்லோரும் புதுச் சக்தியை மொண்டு புத்துயிர் பெற்றுத் தீமையைக்காயவும், சகலஐஸ்வரியத்தைப்பெறவும் சிருஷ்டிசக்தியின் ஆக்கஞானத்தைப் பெறுவதற்கேயாம். சக்தி உண்மையில் உண்டா? இதை எழுதும் பேனா எவ்வளவு உண்மைப்பொருளோ, சக்தியும் அவ்வளவு உண்மைப் பொருள், சக்தியின் வணக்கம் மேலே கூறப்பட்ட சித்திகளைக் கொடுக்குமா? ஆம். சித்தி, பத்தியின் அளவே.

ஓர் இரா ஒரு போர்வீரன் காவல் வேலையில் நின்றான். அலுப்பு மேலீட்டால் தனது துப்பாக்கியைப் பக்கத்திலிருந்த பீரங்கி ஒன்றின் கீழ் வைத்துவிட்டு நித்திரை செய்தான். அவ்வேளை அவனது தலைவன் குதிரைமீதேறிச் சுற்றுச்சோதனைக்கு வந்தான். நித்திரையாயிருந்த போர்வீரன், குதிரைக்குளம்புச் சத்தம்புலன்பட்டதும், துடித்தெழுந்து துவக்குக்குப் பதிலாகப் பீரங்கியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு எச்சரிக்கை நிலையில் நின்றான். தலைவன் அதைக்கண்டு ஏங்கி மௌனமாய்த் தன் வழியே சென்றான். ஒருவன் பீரங்கியைத் தூக்கமுடியுமா? போர்வீரன் தூக்கினான், அரைத்தூக்கத்தில்! இந்தப் பாரிய மதயானைப் பலம் அவனுக்கு எங்ஙனம் வந்தது? அவனுள்ளிருந்தே வந்தது! சக்தி எங்கும் வியாபகம். உன்னிலும், என்னிலும், ஆலயத்தியுள்ள சிலையிலும் சக்தி வியாபகமுண்டு. விசேஷமாய் உனது தாயார் உனக்கு நல்லுணவு தரவும், உன்னை எவ்வித தீமையிலுமிருந்து காக்கவும், உன்னைப் பள்ளிக்கு வைத்து ஒரு சான்றோனாக்கவும் எடுக்கும் பிரயத்தனங்களில் அகில மாதாவின் அருட்சக்தி பொங்கிப் புரளுகிறது. அதை உணராதான் கண்ணில்லான், கல்மனத்தன், சற்புத்திரனுமல்லன். தாயின் தெய்வீகத்தை உணராதவன். ஆலயத்திலுள்ள அம்மன் சிலையிலிருந்து சத்தியைப்பெற இயலாதவனாவான்.

பண்டைத்தமிழர் தாயின் தெய்வீகத்தை உணர்ந்து, தாய்மாரை நாள்தோறும் வணங்கினார்கள். கிறீஸ்துவுக்குப்பின் இரண்டாம் நூற்றாண்டில் தமிழ் ஆசாரக்கோவை என்னும் நூல் வெளிவந்தது. (ஆசாரக்கோவை நூல்கள் ஏனைய சாதிகளிடத்தில், சொற்ப காலத்திற்கு முன்தான் வெளிவந்தன.) அதில் "வைகறை யாமம் துயிலெழுந்து, தான் செய்யும் நல்லறமும் ஒண்

திரு. வி வீரசிங்கம்

பொருளும் சிந்தித்து, வாய்வதில் தந்தையும், தாயுமதொழுதெழுக என்பதே முந்தையோர் கண்ட முறை", என்பது நாலாம் சூத்திரம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறிக் கொள்ளுகிறோம். வணங்குகிறோமில்லை. "தாயிற் சிறந்தொருகோயிலுமில்லை" என்ற மகுட வாக்கைப் போற்றுகிறோம். ஆனால் ஆலயபத்தியுமில்லை, அன்னை வணக்கமுமில்லை! வீரத்தாய்மாரும வீரப்புதல்வரும், தமிழ்நாட்டில் மறைந்தது நூதனமல்ல!

உலகத்திற் பல தேசங்கள், ஒவ்வொரு வருடமும் ஒரு தாய்த்திருநாளைக்கொண்டாடுகின்றன. அமெரிக்காவின் பிரசாதிபதி கெனடியின்மனைவியார் தாய்த் தினத்தன்று தான் செய்தவைகளை அண்மையிற் கூறியுள்ளார். அவர்கள் தந்தை தினத்தையும் கொண்டாடுகிறார்கள் நாம் இறந்தபெற்றோருக்குச்சிரார்த்தம் செய்கிறோம். இந்த இந்து வழக்கம், பெற்றோர் உயிருடன் இருக்கும் பொழுது அவரை வணங்கிய பழக்கத்தின் தொடர்ச்சியாகும். அன்னை தந்தையரிடமிருந்து நாள்தோறும் ஆசீர்வாதத்தைப் பெறும் பண்டைப்பழக்கம் மீண்டும் தமிழர் வழக்கமாய் வந்தால், தமிழ்ச்சாதி சீரும் சிறப்பும்பெற்றுப் பிரகாசிக்கும். பிள்ளைகள் கேட்டதைக் கொடுப்பதற்குத் தாயானவள் என்றும் தெண்டிப்பாள் வணங்கிக் கேட்டால் விரைவிற் கிட்டும். மௌன வணக்கத்தின் பயன் அதிசயிக்கப்படக்கூடியதாய் வரும். பெரியோர் பலர் தம் புகழுக்கும் பெருமைக்கும் தாயே பாத்திரவாளியென்று கூறுகின்றனர், பெரிய மகான்கள் தாயின் படத்திற்குத் தினமும் வந்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## காலத்தொடு கற்பனை கடந்த மூலப் பொருள்

—:0:—

### அநாதி நித்தியப் பொருள்கள்

—0—

அநாதி நித்தியப் பொருள்கள் பதி, பசு, பாசம் என்பன. உலகம் தோன்றி நின்றழியும். சரம் அசரம் என்ற இருவகைப் பொருள்கள் இதில் உள்ளன. பதியே அழியாதவர். ஆன்மாக்களும அழிவற்றன. இறைவராகிய கடவுளுக்குப் பாரபட்சமில்லை. பாசத்துடன் கூடிய ஆன்மாக்களை விடுதலை செய்யவே கடவுள் திருமேனி கொண்டார். கோயில் என்பது சிதம்பரம் குலம் என்றதனால் விளங்கும். ஒருவனே தெய்வம் என்பது நடராஜப் பெருமானையே குறிப்பது, அது ஒருபுறமாக;

திருக்கோயிலே அநாதி நித்தியப்பொருள்களைக் காட்டும். அவை சமணப்பள்ளி போன்றன அன்று: அவை ஆகம முறைப்படி அமைந்

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

தன. உடம்பு ஒரு மனிதனுக்கு எவ்விதம் அமைந்ததோ அதேபோல் ஆதாரங்களைக்காட்டும் மண்டபங்கள் புற ஆலயங்களிலுள்ளன.

ஆயபதிதானருட் சிவலிங்கமாம்
ஆயபசுவுமடலேறெனநிற்கும்
ஆயபலிபீடமாகு நற்பாசமாம்
ஆய அரனிலை யாயவல்லார்க்கே.

நால்வர் சென்ற வழி சைவசமய வழியே. நாகரிகம் அக்காலம் சமயத்தைப் படைக்கவில்லை. சமயந்தான் அநாதியாகவுள்ளது. அதன் வழி ஒழுகினோர் கொண்டதே நன்னாகரிகம். அதாவது உண்மைச்சமயநிலை. "சிவனென்னு நாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்றும் "சைவத்தின் மேற்சமயம் வேறிலை, அதிற்சார் சிவமாந் தெய்வத்தின் மேற்றெய்வம் வேறிலை" என்பனவற்றை நோக்குக. கடவுளை வணங்குவது அநாகரிகம் என்று நாஸ்திகர் கூறுவர். அறிவு இப்படி மழுங்குமா?

இன்னும் சமயத்தின் முழுமுதற் கடவுளை இவர்கள் அறிந்திலரே! அரிய பிறப்பில் இறைவழிபாடு செய்யாது ஆன்மத்துரோகம் செய்வது மகாபாதகமாகும். பிரம விஷ்ணு இந்திராதியர் யாரை அடைக்கலம் புகுந்தனர்? ஆலகால விடங்கண்டஞ்சினர். சிவபிரானே யாவரும் வெறுக்கத்தக்க விடத்தை திருவமுது செய்து கண்டத்தில் வைத்துக்காட்டி அருளினார். கங்கையைத் தாங்கிப் பகீரதனுடைய சந்ததியின் பாபத்தைப் பரிகரித்தருளியவர் கையிலாசபதியே! சிவ பரத்துவம் எழுதி முடிவுறாது. சிவசப்தம் இல்லாது மக்கள் பிறவிக் கடலைக் கடக்க முடியாது.

சிவ ஏகோத் தியய:
ஸர்வம் அந்யயத் பரித்தியய.
"மற்றெல்லாம் விடுத்துச் சிவனொருவரே தியானிக்கற் பாலர்" என்றும், "சம்புராகாசமத்யே" என்றும் "சம்பு என்னும் நாமமுடைய சிவபிரான் சிதாகாயமத்தியிலுளர்" என்றும் சிவபிரானின அநாதி நித்தியத்துவமும், தியான கர்த்தா அப்பரம் பொருளே என்பதும் வெட்டவெளியாகவிளங்கும். ஆகவே பச்சோந்திபோலஇடங்கடோறும் வேறு வேறு விதமான பிரசாரம் செய்வோர் வஞ்சனையிலகப்படாது சைவ சீலர்கள் சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பெருநெறியில் வழுவாது தியானவழிபாடுகளை இனிது செய்து ஆன்மஈடேற்றம்பெற முன்னி முன்னிற்பார்களாக.

———



நல்லைக்கீர்த்தனம் — 16.

## குஹன் இன்பம் தருவான்

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பேகட    :    தாளம் : ஆதி

பல்லவி

என்றும் உன்னையே அவர்எண்ணி எண்ணிஉருகி
நன்கு நலிந்தாள் ஸ்வாமி — என்தோழி,

அநுபல்லவி

குன்றுதோறும் விளங்கும் குமரனே நல்லையிலே
அன்றுநீ காதல்தந்து சென்றநன் நாள்முதலாய்

சரணம்

நித்திரை இல்லைஎன்பாள் நிலவுங் கோதிக்குதேன்பாள்
பத்தரை மாற்றுத்தங்கப் பசும்மேனி நோகுதேன்பாள்
இத்தரைமீதில் குஹன் இன்பம் தருவான்என்பாள்
பித்தரைப் போலநின்று பிதற்றிமுருகா என்பாள். (எ)

நேயர்கள் நெஞ்சம்

## சிவஞானபோதம்

=0=

ஐயா,

தங்கள் இந்துசாதனத்தில் 'சிவஞானபோதம் — தமிழர் பண்பாடு' என்ற கருத்தில் சில கட்டுரைகள் முன்னர் வெளிவந்தன. பின்னர் (இப்பொழுது) அது தவிர்க்கப்பட்டு, 'சிவஞானபோதம்' என்ற பெயருடன் விஷயங்கள் நல்லவும் அல்லவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன, இப்பொழுது வெளிவரும், "சிவஞானபோதம்" ஆரியர் பண்பாடோ?

பொ, கந்தையனார்,
'சிவபுரம்'
கொடிகாமம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாபநிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

**100 ரூபா விகிதமான 5000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M. B. 3809
காரைநகர் கிழக்கு களபூமி
சின்னக்குட்டி கந்தையா
வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை
மேற்கு
1. சுப்பையா செல்லத்துரையும் மனைவி
2. மங்கையற்கரசியும்.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3809 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டு காணி 1962 ம் ஹூ அக்டோபர்மீ 20உ (20-10-62) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் ரூபா 500 -ம் மேலும் இத் தொகைக்கு 1-3-62 திகதி தொடக்கம் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 126-85 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பெரியவளவு" 17, 3/5 குளிகள். வீடும் கிணற்றுப் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு இளையதம்பி கதிரவேலுவின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். வடக்கு காட்டுத்துறை பிள்ளையார்கோவிலாதனம். மேற்கு புன்னலை ரேட் தெற்கு சோமசுந்தரம் மனைவி மகேஸ்வரியினுதனம். பதிவு D 267/221 இதில் சொரியலாய் அரைவாசிப்பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் 3-9-62.
M 124 28-9-62.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. த. செ. செல்லையா பிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-60 முதல் 31-3-61 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 17-10-62 புதன்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் என்னல் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. Ragunathan
Auctioneer.
M 115 21, 28-9-62.

## தாயை வணங்குதல்...

2-ம் பக்கத் தொடர்ச்சி

தனை செய்தலே சிறந்த வணக்கம் என்பர். உயிர்த் தாய் வணக்கம் உண்மையிற் பெரிது. பெற்றோரை இடுகாட்டிற் சிதையிலேற்றி விழுந்துவணங்குவதுஇன்றும் சைவத்தமிழர் பழக்கமாயிருக்கிறது. இதிலிருந்து அவர்களை உயிருடன் இருக்கும்பொழுது வணங்குவது சாலவும் நன்றுஎன்று தெரிகிறது. பிள்ளைகள் அதைச் செய்யக் கூசுகிருர்கள், பெற்றோரும் வெட்கப்படுகிருர்கள். அப்படி வணங்குவதனல் வரும் தாய நன்மையையும் சமூக வளர்ச்சியையும் கிரகிக்க முடியாதவர்களாயிருக்கிருர்கள். இந்தியப்பெரியார்கள் அதைச் செய்கிருர்கள் சிங்களவரும் பின்பற்றுகிருர்கள். கீழ்நோக்கிச் செல்லும் யாழ்ப்பாணச்சாகியத்தைத் திரும்ப மேல்நோக்கடையப்பண்ணுவதற்குத் தாய்வணக்கம் ஒன்றே போதியதாகத் தெரிகிறது. நவராத்திரி காலத்தில் தாயை வணங்கி எங்கள் தளையை யறுத்தாலென்ன?

துணிகரமுள்ள மக்கள், நவராத்திரி காலத்தில் ஒவ்வொருநாளும் அதிகாலையில் தாயை வணங்கியபின் தம் வேறு கடமைகளைச் செய்யலாம், ஆலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தாய்மாரை அழைத்து ஆசனங்கொடுத்து, வழக்கப்படி தாம் பூலமென்றாலும் வழங்கி உள்ளம் குளிரப்பண்ணி மக்களெல்லோரும் ஏகோபித்து ஒரே நேரத்தில் அவர் முன்னிலையிற் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாம், பிள்ளைகள் வணங்கத் தாய்மார், ஒருவரும் கற்பியாமலே தாமாயெழுந்து பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்கள். அவ்வேளை அன்பின் அலைப்பிரவாகம். தாய்மார் கூட்டத்திலிருந்து உற்பத்தியாகி பிள்ளைகளையும் மற்றவர்களையும் அன்பின் அருட்கடலில் மூழ்கிச் சார்ந்த இன்பம் கொடுத்து, பல்வேறு துன்பந்துடைத்துத் தமிழ்ச் சாதியைச் சாத்வீகமயமாக்கும். சுபந்தரும். யாழ்ப்பாணம் இந்தநிலையடையுமா? தாய் நாடு சிறக்கின் தாயை வணங்கவேண்டும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காட்டு வளவில் கோவில் கொண்டருளியிருக்கும் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாக்கள்.
உசன்
1. கந்தையா சுவாமிநாதர் கரம்பன்
2. கந்தையா விஞசித்தம்பி
3. சந்திரசேகரி இராசரத்தினம்
—வழக்காளிகள்.
இல. 1832,

எதிராக

உடுவில்
1. பொன்னம்பலம் நாகலிங்கம்
2. பெண் நாகலட்சுமி
மல்லாகம்
3. யாழ்ப்பாணம் மத்திய பஸ் கொம்பனியின் தொழிலாளர் சேமநிதிச் சங்கம்,
வதுளை
4. கே. வேலுப்பிள்ளை நடராசா
—எதிராளிகள்,

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1832-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 17-ம் திகதி (17-11-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 6757-70 ம், இதில் ரூபா 4975-க்கு 6-10-59 திகதி தொடக்கம் 9-2-60 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 287-85 சதம். இதில் ரூபா 1000/- இறுபட்டது. மேலும் செலவு ரூபா 12-ம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை "பெரியபுலம்" நிலப்பரப்பு 11-ம் குளி 8 5/8-ம். இதில் கிழக்குப்பக்கமாக வீந்தமாக நிலப்பரப்பு 5-ம் குளி 12 5/16-ம் இக்காணியில் இருக்கும் கல்வீட்டில் கிழக்குப்பக்கமாக அரைவாசியும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் வடகிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் ஆனல் குறித்த கிணற்றில் மேற்கே மிகுதிக் காணிக்குரிய அரைவாசிப் பங்கும், வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு கனகசபை பெண் செல்வரத்தினத்தின் ஆதனம். வடக்கு கந்தையா பெண் மாணிக்கத்தின் ஆதனம். மேற்கு மிகுதி ஆதனம். தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் முற்பதிவு H 282/57.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 6-9-1962.
M. 129, 28-9-62.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6776-ம் இலக்க வழக்கில் 1962-ம்ஆ ஆவணிமீ 9ம்உ யைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1962-ம்ஆ கார்த்திகைமீ 5-ம்உ திங்கட்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

விபரம்

அல்வாய் மேற்கு
கந்தையா வேலுப்பிள்ளை
—வழக்காளி.

எதிராக

அல்வாய் மேற்கு
1. சிதம்பரப்பிள்ளை கந்தவனம்
2. சிதம்பரப்பிள்ளை கிட்டிணபிள்ளை ...எதிராளிகள்.

அறவிடவேண்டிய தொகையின் விபரம்

தீர்வைத்தொகை:- ரூபா 1105. 23-8-60 தொடக்கம் 11-1-61 வரைக்கும் ரூபா 560-க்கு வட்டி ரூபா 21. 12-1-61 தொடக்கம் 26-7-62 வரைக்கும் மொத்தத் தொகை ரூபா 1126-க்கு 5 வீத வட்டி ரூபா 86-78, கோட்டுச் செலவு ரூபா 238-66. மொத்தம் ரூபா. 1451-44,

ஆதனடாப்பு

1. அல்வாய் மணி வீரவாகு தேவன் குறிச்சியிறை நீற்றுவான்தெணி. நி. பர. 21¾, இதில் ஆட்சிப்படி ¼ பங்குக்கு நி பர. 5, குளி 8. பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு வல்லிபுரம் கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு வல்லிபுரம் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு கந்தையா வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையஆதனம். தெற்கு நீர்வேலியிற்பிள்ளையார்கோயிலுக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் 1/3 பங்கும் முழுக்காணிக்குட்பட்ட கிழக்குப் புறமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரிததும்,

2, ஷை இறை. கறுத்த தெணி, நில. பர. 10½, ஷை நில, பர, 9 ஷைதோட்டம் 2. இப்பிரிவுகளில் மேற்குப்புற்மாக 1/12 பங்கு கழித்து அதற்கடுக்க கிழக்குப் புறமாக 7/12 பங்குக்கு ஆட்சிப்படி நில. பர, 18, குளி 17, 11/16, எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு சிதம்பரப்பிள்ளை கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளில் சொரியலாய் 37/336 பங்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

3. ஷை. இறை. ஆவளைபறுகு. நில. பர. 14¾. இதில் மேற்கரைவாசியில் தெற்கரைவாசிக்கு ஆட்சிப்படி நில பர. 3¾, பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு கணபதியார் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம், வடக்கு கந்தையா வயிரமுத்துவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம், மேற்கு வல்லிபுரம் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். தெற்கு கணபதியார் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் 1/3 பங்கும் முழுக்காணிக்குட்பட வடக்குப்புறமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு, 20-9-1962.
M. 123 28-9-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மந்துவில் பொன்னையா வேலாயுதம்பிள்ளை — வழக்காளி.
இல. 1995.

எதிராக

மந்துவில் செல்லத்துரை கைம்பெண் கதிராசிப்பிள்ளை
—எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1995ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1962-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 3-ம் திகதி (3-11-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4307-41ம் இதில் ரூபா 3300 க்கு 19-5-60 திகதி தொடக்கம் 28-8-61 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 62—31 சதம். இதில் ரூபா 2000 ம் இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிக் கோவிற்பற்று மந்துவிலிறை "விசயவாகுதேவன் வளவு" நிலப்பரப்பு 5½ம் பனைகளும் தென்னைகளும் மாமரங்களும் கல்வீடும். எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு உறுதிப்படி நன்னியன் வயித்திக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு பண்டாரி கைம்பெண் சின்னனுக்கும் கீழே குறிக்கப்படும் 3-ம் ஆதனமும் தெற்கு 2ம் ஆதனம். இதடங்கலும் முற்பதிவு F 261/181.

2. மேற்படி மந்துவிலிறை "விசயவாகுதேவன் வளவும் மாப்பாண வளவும்" நிலப் பரப்பு 17¾-ம் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு மேலே குறிக்கப்பட்டிருக்கும் 1-ம் ஆதனம், மேற்கு 3ம் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதில் சொரியலாய் 1/3 பங்கும். இன்னும் 1/3 பங்கில் நிலப்பரப்பு நாலு நீக்கி மிகுதியும் அதாவது முழுதிலும் சொரியலாய் 94/213 பங்கு.
முற்பதிவு F 261/182.

3. மேற்படி மந்துவிலிறை அம்பலவாண வளவு" நிலப் பரப்பு 9½. இதில் வடக்கே நிலப்பரப்பு (5ம்) மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு 1ம், 2ம் ஆதனம். வடக்கு உறுதிப்படி சடையன் பெண் மாணிக்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு வேலன் சின்னப்பொடியனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும் காசித்தம்பி வேலாயுதம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் முற்பதிவு F 305/179.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 11-9-1962.
M. 128 28-9-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்றிக் கோட்டில்
நாவற்குழி செல்லையா
கைம்பெண் பாக்கியம்
வழக்காளி.
இல 2136

எதிராக

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு விசுவலிங்கம் தாமோதரம்பிள்ளை —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டால் 2136 ம் இலக்க வழக்குக் கட்டளைப் பிரகாரம் கீழ்க்காணு மட்டவணையில் விபரிககப்படுமாதனம் 1962 ம் ஹூ கார்த்திகைமீ 3ம்உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 2390ம் 30-12-60 — 7-7-61 வரை ரூபா 2000 க்கு 12 வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-91 சதம்,

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை மணற்காடு நி. பர. 8½ எல்லைகிழக்கு வேதவனம் கந்தையாவுக்குரியவாதனம், வடக்கு முருகர் மார்க்கண்டுவுக்குரியவாதனம். மேற்கு காங்கேசு பொன்னையாவுக்குரிய வாதனம். தெற்கு மண்தெரு. இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம் பனைகள் தென்னைகள் மற்றும் பயிர்கள் அடங்கலிற் சொரியலாய் 14/15 பங்கு. பதிவு இல. F 226/32.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 30-9-62.
M. 127 28-9-62

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் யாழ்ப்பாணம் 230 (A) நாவலர்வீதியில் தி. நவரெத்தினம் என்னும்விலாசத்தில் அடைவுபிடிக்கும் அடைவு கடையில் 1955ம் ஹூ ஐப்பசிமீ 3ம் தேதி தொடக்கம் 1958ம் ஹூ மார்கழி மீ 31ம் தேதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னல் 1962ம் ஹூ ஐப்பசி மீ 13 ம் தேதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் ஷை அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்,
1962ம்ஹூபுரட்டாதிமீ 18ம்தேதி
வை. ஏரம்பமூர்த்தி,
ஏல விற்பனையாளர்.
Auctioneer.
M 116 21; 28-9-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுநாட்பட்ட மயக்க உணர்வு அடிக்கடி தலைகாட்டும். அதனால் பொய்ப் பொருளே மெய்யென்று மறுபடியுந்நினைக்கத்தலைப்படும். உலகத்து ஆசாபாசங்களில் மறுபடியுஞ் சிக்கிக்கொள்ள முற்படும். எனவே மெய்ப் பொருட்தரிசனம் பெற்ற சீவன் முத்தன் மறுபடியும் பொய்ம்மை நிலையிற் புகாது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பஞ்சாட்சர செபஞ் செய்தல்வேண்டுமெனச்சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம் கூறுகிறது

இந்தச் சாதனையால் அடைந்த பயன் இந்த மெய்ஞ்ஞானத்தால் அடைந்த விடுதலை இருவகைத்து, ஒன்று பாச நீக்கம்; மற்றது சிவனோடு ஐக்கியம். இறைவனடி சேர்ந்த ஆன்மா மும்மலம் நீங்கப் பெறும். கடவுளை அறிதல் மாத்திரமன்று; அவனோடு ஐக்கியப்படல் வேண்டும். அறிதலினால் நான் அறிந்தேன் என்ற அகங்காரமுண்டாகும். சிவனோடு ஐக்கியப்படுவதால் இந்த அகங்காரமாகிய ஆணவம் அறும்; கடவுள் பணிசெய்வதால் கன்மமும், மாயாத்துவங்களாற் கட்டுப்படுந்தன்மையும்நீங்கும். எனவே கன்மமும் மாயையும் அற ஈசன்பணி செய்ய வேண்டும், கடவுளிடத்து அனன்ய பக்தியோடு எல்லாச் செயலையும் ஈசன் செயலாகச் செய்யவேண்டும். அப்பொழுது பிராரப்த கன்மத்தினால் ஆகாமிய கன்மமுண்டாகாது. அதாவது இல்வாழ்வில் செய்துகொண்டிருக்கும் கன்மங்களாலுண்டாகும் பயன் உயிரைப் பீடிக்காது. எனவே பிறவிக்கு வித்தில்லாது போய்விடும். பிறவியழியும்.

இந்தச் சிவஞானத்தால் கிட்டும் மற்றொரு பயன் சிவப்பேறு. அதாவது சிவனோடு இரண்டறக் கலந்து நிரதிசயானந்தத்தை யடைதல். இதுவே அந்தமிலின்பத்து அழிவில் வீடு இதுவே உயிரின் குறிக்கோள். அதனுடைய நிஷ்டை. இறுதியான தங்குமிடம். அதனையும் இந்த உடல் உயிரோடிருக்கும் பொழுதே பெறலாம். இதுவே தண்ணிழலாம்பதி

இவ்வாறு முத்திநிலையடைந்த சீவன் முத்தர் உலகில்இருக்கும்வரை பொய்ம்மையின் பரிச்சயமில்லாமற் போகமாட்டாது. ஆனபடியால் சிவபக்தர், தூய்மையுடையவர் கூட்டத்தைச் சேர்ந்து, சிவவேடத்தையும் திருக்கோவிலையும் வழிபாடு செய்வர். இது சிவஞானபோதக் கருத்து.

——

இவ்வாரம் (30-9-62 — 6-10-62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கும். வாகனங்கள் காரணமான தொல்லைகளும் ஏற்படும். ஆனால் எதிர்ப்புக்களைத் தாண்டிவிட உம்மால் முடியும். பண இலாபங்களும் உண்டாம். புதன் வியாழனும் வெள்ளி காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்,

இடபராசி கார்த்திகை 2, 3-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1. 2-ம் பாதம்,

அந்நியரும் அயல்தேசத்தவரும் மிக உதவியாக இருப்பர். நிலபுலங்களால் இலாபங்கள் உண்டாம். ஆனால் குடும்பத்தகராறுகளுக்கு இடமுண்டு, வெள்ளி மாலையையும் சனியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

குடும்பவட்டாரத்தில் சச்சரவு இருந்தேவரும். மன அமைதி இருக்காது. நண்பர்கள் இக்கட்டிலிருந்தும் காப்பாற்றுவர், பண இலாபங்களும் உண்டாம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

உடல்நிலை பிரச்சினைக்குரியது மன அமைதிபெறமாட்டீர். பணிமனையில் சச்சரவும் உண்டாம். தம்பி தங்கைகள் உதவியாக நிற்பர்,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நீர் போதியளவு வருவாய் பெற்றாலும் செலவுகள் பெருகும். கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம் எதிர்ப்புக்கள் கரைந்தோடிவிடும். கண்நோய்களுக்கு இடமுண்டு.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பழைய மூதலீடுகள் நல்வினைவைக் கொண்டுவரும். நிலபுலம் வழியான இலாபமும் உண்டாம். சில காலத்திற்கு உடல்நிலை பிரச்சினைக்குரியதாயிருக்கும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உழவுத்தொழில் ஈடுபாடுகள் நல்ல பயனைத்தரும். புகழுஞ் சமூக வெற்றியும் உண்டாம். ஆனால் வண்டி முதலியவற்றால் தொல்லையும், அன்னையாருக்குச் சுகவீனமும் ஏற்படும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

தந்தைவழி உறவினர் உமக்குப் பெருந் தொல்லையை உண்டுபண்ணுவர். ஆனால் பணமளவில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும். கல்வி ஈடுபாடுகளில் வெற்றியும் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலைக் குழப்பங்கள் ஏற்படும். நீர் உமது சொந்த விவகாரங்களில் பாரதூரமான பிற்போக்கிற்குள்ளாக நேரிடலாம், ஆனால் மேலிடத்தாரின் சலுகைகளும் புகழும் உண்டாம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

குடும்ப நிலைமை தொடர்ந்து குழம்பலாகவே இருந்துவரும். ஆனால் பணமளவில் நல்ல வாரம். எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் மிக உதவிகரமாயிருப்பர்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1. 2, 3ம் பாதம்,

ஞாயிறு காலை எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். மிகுதி நாட்கள் எல்லாப்பொறுப்புகளுக்கும் உகந்தவை. எதிரிகளுக்கு இடர் ஏற்படும். நிலபுலங்களால் வருமானமும் உண்டாம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

வயிற்றுக்கோளாறு தொடர்ந்து இருந்துவரும். சிறு குடும்பத்தகராறுகளும் உண்டாம். ஞாயிறு மாலையையும் திங்கள் செவ்வாயையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். மிகுதி நாட்கள் தொழில் ஈடுபாடுகளுக்கு ஏற்றவை.

### கதாப்பிரசங்கம்

கொழும்பு சிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 30-9-62 இல் "திருஞானசம்பந்தர்" என்னும் விஷயம்பற்றிய திரு அண்ணாமலை அவர்களின் கதாப்பிரசங்கமும் செல்வி கௌரிசிவஞானம் என்பாரின் இசைக்கச்சேரியும் நிகழவிருக்கின்றன.

### தங்கம் தாங்கும் வில்வம்

"சைவ சமயத்திலே நாம் செய்யும் வழிபாட்டு முறைகள் யாவற்றிற்கும் சிறந்த கருத்து உண்டு அவற்றை அறிந்து நாம் வழிபாடாற்றுவதினாலே வழிபாட்டின் பலன் பலமடங்கு பெருகுகிறது"

இவ்வாறு தெல்லிகிழக்கு பாலர் ஞானோதய சபை சார்பில் காசிவிநாயகர் ஆலயத்தில் நடந்த கூட்டுப் பிரார்த்தனையின் போது திரு சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

விநாயகப் பெருமான் அறிவைக் கொடுக்கும் கடவுளாக விளங்குகிறார். நாம் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குமுன் அதற்குரிய அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அறிவிருந்தால் அத்தொழில் பூரணமாக முடிவு பெறும். சிவபெருமானே முப்புர தகனத்திற்குச் சென்றபொழுது விநாயகரை வணங்காமல் சென்றமையால் அவரது தேரச்சு முறிந்தது. இதனை அருணகிரிநாதர் "அச்சிவன் உறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா" என்று பாடியுள்ளார். அறிவைப் பெறுவதற்காகவே விநாயகப் பெருமானைத் தலையில் குட்டி வணங்குகின்றோம். படியாத பிள்ளைகளுக்குத் தலையில் குட்டுவது ஓர் வழக்கம். பிரமதேவரைப் பிரணவப் பொருள் வினவி தலையிற் குட்டினார் முருகப் பெருமான். மூளைக் கொதிப்புக்கு அறுகங் கிழங்குத் தைலம் நல்லது என்று வைத்தியர் சொல்வார்கள். மூளையில் வரும் நோய்களை மாற்றுவதற்காக அறுகம் புல் இட்டு விநாயகரை வணங்குகின்றோம். விஷ்ணு கோவிலில் நாம் பெற்றுக் கொள்ளும் தீர்த்தம் துளசி கலக்கப்பெற்றது. அதனால் கபம் நீங்கப்பெறுகிறது. சிவபெருமானுக்கு கொடுக்கப்படும வில்வமோ தங்கச் சத்துள்ளது.

---

## சிதம்பரம் அம்பலவாண சுவாமி மானா முதலியார் மடம் தொல்புரம்

## கூட்ட அறிவித்தல்

யாழ்ப்பாணம் பெரியகோட் 15340-ம் நம்பர் வழக்கின் கட்டளைப்படி தொல்புரம் சிதம்பரம் அம்பலவாணசுவாமி மானாமுதலியார் மடப் பொதுக்கூட்டம் மேற்படி மடத்தில் வாக்குரிமைடாப்பு தயாரிப்பதற்கு பின்னாற் குறிககப்படும் யோககியதையுடையவர்கள் போதிய சான்றுடன் நிகழும் சுபகிருது ஹூ புரட்டாதி மீ 21-ந்உ (7-10-62) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 1 மணி வரைக்கும் நடைபெறும்,

1. நிலங்களைத் தருமசாதனஞ் செய்த நன்கொடையாளர்களின் மரபினிலுள்ளோரும்
2. சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலும் இப்பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தச் சிரத்தையெடுத்தவர்களும்
3. அவர்கள் மரபிலுதித்துத் தற்போது அதை நடாத்துகிறவர்களும்
4. இவ்வியாச்சியம் தொடர்வதற்கு முந்திய 10 வருடங்களுக்குள் இத்தரும பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்துவதற்குப் பண உதவி கொடுத்தவர்களும்

ஷை ஹூ புரட்டாதிமீ 28-ந்உ (14-10-62) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் ஷை மானா முதலியார் மடத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அத்தருணம் அங்கத்தவர் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல்:

1. அறிக்கை வாசித்தல்
2. வரவு செலவு வாசித்தல்
3. புதிய தர்மபரிபாலன சபை அங்கத்தவர்களைத்தெரிதல்.

மா. கனகசுந்தரம்,
கௌரவ காரியதரிசி
சி அ சு, மா. மு மடம்
தொல்புரம்.
M. 133 28-9-62.

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

—:—

பருத்தித்துறை
ரெகுவெஸ்துக் கோட்டில்
வழக்கு இல. 2422
கரவெட்டி வடக்கு
கந்தவனம் இரத்தினசிங்கம்
—வழக்காளி.

எதிராக

1. ஷையூர் நாகலிங்கம் கனகசிங்கம்.
2. ஷையூர் வயித்திலிங்கம் சிவப்பிரகாசம்
3. பெண் சிவக்கொழுந்து

—எதிரிகள்.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1962-ம்ஆ ஐப்பசி மாதம் 20-ந் திகதி சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனவிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி வதிரிக் குறிச்சியிறை "தாரிககப்பற்றை" நிலப்பரப்பு 10 குளி 6 28/32 இதற்கு உலாந்தா மேஸ்தர் மா. வேலுப்பிள்ளை அவர்களால் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 3-ம் நம்பர் துண்டுக்கு நிலப்பரப்பு 4 குளி 15 14/32 அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் 4-ம் நம்பர் துண்டு. வடக்கு குறித்த படத்தில் 2-ம் நம்பர் துண்டு, மேற்கு ஆழ்வார் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு வேலன் செகநாதனுக்கும் மறுபேருககுமுடையவாதனம். இது முழுவதும்.

தரட்சித்தொகை ரூபா. 300. இதற்கு 31-12-1960 தொடக்கம் இறுபடும் வரையும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 91-20,

V. M. KANDASAMY
Commissioner of sales
& valuer
வல்வெட்டித்துறை,
19-9-62.
M 132, 28-9-62

## அநுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தின்
## 18-ம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும்

"பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களே ஆசிரியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கூடிய கவனஞ் செலுத்தவேண்டும்" என்று அநுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தில் (24-9-62) திங்கட்கிழமையன்று நடந்த ஷைவிழாக்களுக்குத் தலைமை வகித்த கல்விப்பகுதிக் கணக்காளர் திரு. மு. பசுபதி அவர்கள் தமது தலைமைஉரையிற்குறிப்பிட்டார்கள். மேலும் அவர் பேசும்போது பிள்ளைகள் பாடசாலையிற்படிப்பது ஐந்து மணித்தியாலங்கள் மட்டுமே மிகுதி பத்தொன்பது மணித்தியாலமும் வீட்டிலேயே கழிகின்றது. ஆதலின் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கல்விக்கேற்ற ஒரு சூழ்நிலையை ஆக்குவதுடன் ஆசிரியர்களுடனும் கலந்து உசாவி பிள்ளைகளின் அறிவு விருத்தியிலும் பிள்ளைகள் கற்கும் பாடசாலையின் வளர்ச்சியிலும் பெரும் பங்கெடுக்கவேண்டும் என்றும் கூறினர். இறைவணக்கத்துடனும் மாணவிகளின் வரவேற்புக் கீதத்துடனும் ஆரம்பமான இவ்விழாவில் அதிபர் திரு. ந. நவரத்தினம் அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார். தலைவராற் பரிசில்கள் வழங்கப்பட்டன.

x x x

20-9-62 வியாழக்கிழமை மாணவர்மன்ற ஆதரவில் பாரதிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

—:—

### நவராத்திரி இசையரங்கு

—0—

பரமேஸ்வராக் கல்லூரியில் 11-வது தடவையாக நடைபெறும் நவராத்திரி விழாவில் 9 நாட்களும் மாலை 6 30 மணி முதல் இரவு 10-30 மணிவரை பிரபல இசை மேதைகளின் இசைக்கச்சேரிகள் நடைபெற இருக்கின்றன. கல்லூரி மாணவர்களேயன்றி அல்லாதவரும் அனுமதிக்கப்படுவது வருடாந்த வழக்கம்.

———

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 28-9-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org